<u>சார்பு நீதிமன்றம், திருவாரூர்.</u>

முன்னிலை திரு. M.முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**<u>அசல் வழக்கு எண்.126/2024</u>**

வாதி தரப்பு சாட்சி வா.சா.3 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. K. ரெஜினா, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர்: | திரு. மதியழகன் | த/பெ: சின்னையன் |
| வயது: | | ஊர் : |
| தொழில்: | | முகவரி: |
| தேதி: | 27.01.2026 | |

<u>முதல் விசாரணை...</u>

நான் இவ்வழக்கில் நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததன் பேரில் சாட்சியமளிக்கிறேன். வழக்கு வாதி, பிரதிவாதிகளை எனக்கு தெரியும் வாதி எனது மனைவி ஆவார். வழக்கு விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் வா்.சா.ஆ.1 ஆவணம் பிரதிவாதி எனது மனைவி வாதிக்கு எழுதிக்கொடுத்தது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள ஒன்றாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. 2 வது சாட்சி கையொப்பம் பிரதிவாதியின் தாயாரான ஜீனத்பீவியின் கையொப்பம் ஆகும். ஜீனத்பீவி வா.சா.2 ஆக சாட்சியமளித்துள்ளார். நானும் ஜீனத்பீவியும்தான் வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் போட்டோம். ஜீனத்பீவி சார்பதிவாளர் அலுவலகம் வந்து சார்பதிவாளர் முன்னிலையில்தான் சாட்சி கையொப்பம் போட்டார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் இரண்டாவதாக போடப்பட்டுள்ள கையெழுத்து ஜீனத்பீவியின் கையெழுத்துதான். ஜீனத்பீவி அந்த கையெழுத்தை கூத்தாநல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர் முன்னிலையில் போட்டார்.

**குறுக்கு விசாரணை**

முதல்விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி எனது மனைவி என்பதால் வாதி

கொடுத்த பொய்யான வழக்கிற்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டில் உள்ள அலுவலகத்தில் வைத்து வா.சா.ஆ.1 ஆவணத்தை தயார் செய்துவிட்டு பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.